# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2052 ● டிசம்பர் 25, 2021

Weekly E-paper ● December 25, 2021




## முதல்வரின் சித்தாந்த முழக்கங்கள்!

சுப.வீரபாண்டியன்

### வாக்காளர் அட்டை ஆதார் எண் இணைப்பு

மா.உதயகுமார்

### விவாதம் இல்லா நிறைவேற்றம்?

தலையங்கம்

### பரிதாப நிலையில் மீனவர்கள்!

மதிவாணன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● டிசம்பர் 25, 2021

Weekly E-paper ● December 25, 2021


# முதல்வரின் சித்தாந்த முழக்கங்கள்!

**சுப.வீரபாண்டியன்**

தந்தை பெரியார் நினைவு நாளான நேற்று, அவர் சிலைக்கு மாலையணிவித்த தமிழ்நாடு முதலமைச்சர், தன் ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள செய்தி , பெரும் மகிழ்வையும் ஊக்கத்தையும் தருவதாக உள்ளது. அந்தச் செய்தி இதுதான் -

“ஈராயிரம் ஆண்டுகள் அடக்கப்பட்ட இனத்தின் மான உணர்ச்சியைத் தட்டியெழுப்பி, சுயமரியாதை ஒன்றே அடிமை விலங்கைத் தகர்த்தெறியும் வழி எனத் தொண்டாற்றிய தந்தை பெரியாரின் நினைவுநாளில், ஆதிக்கச் சக்திகளின் சூழ்ச்சிகளை வென்று - திராவிடக் கொள்கைகள் கொண்டு தமிழர் மானம் காக்கச் சூளுரைப்போம்!”

அதே போல, நேற்று மாலை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் வழங்கிய ‘அம்பேத்கர் சுடர்’ விருதினைப் பெற்றுக்கொண்ட நம் முதல்வர், “திராவிட - அம்பேத்கரிய - பொதுவுடைமைக் கொள்கைகளின் வழித்தடத்தில், ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உழைப்பதே என் கடமை என நான் செயலாற்றுவேன்” என்று உறுதி கூறியுள்ளார்.

இவ்விரண்டு செய்திகளும் முதல்வர் விடுத்துள்ள சித்தாந்த முழக்கங்கள் என்றே கொள்ள வேண்டும்.

“திராவிடக் கொள்கைகள் கொண்டுதமிழர் மானம் காப்போம்” என்பது எவ்வளவு பெரிய செய்தி! மறைந்த நம் இனமானப் பேராசிரியர், “நான் தமிழன் என்னும்போது பெருமை கொள்கிறேன், திராவிடன் என்னும்போது உரிமை பெறுகிறேன்” என்பார்.

இந்தச் செய்திகளையெல்லாம் உள்வாங்கிக் கொண்டுதான், சமூகநீதி என்னும் உரிமையை, சமத்துவம் என்னும் மான உணர்வைத் திராவிடம் என்னும் சித்தாந்தத்தின் மூலம் ஒவ்வொரு தமிழரும் பெறுவதற்கு வழிவகை செய்வேன் என்கிறார் முதல்வர்.

> “திராவிடம், அம்பேத்கரியம், மார்க்சியம் ஆகிய முக்கூட்டுக் கொள்கையின் தேவையையும் அவர் உணர்த்தத் தவறவில்லை. கருப்பு, நீலம், சிவப்பு ஆகிய மூன்றும் வெறும் வண்ணங்களில்லை, சமூக மேம்பாட்டிற்கான எண்ணங்கள் என்பதும் முதல்வர் பேச்சின் மூலம் வெளிப்பட்டுள்ளது.”

அதே நேரம், திராவிடம், அம்பேத்கரியம், மார்க்சியம் ஆகிய முக்கூட்டுக் கொள்கையின் தேவையையும் அவர் உணர்த்தத் தவறவில்லை. கருப்பு, நீலம், சிவப்பு ஆகிய மூன்றும் வெறும் வண்ணங்களில்லை, சமூக மேம்பாட்டிற்கான எண்ணங்கள் என்பதும் முதல்வர் பேச்சின் மூலம் வெளிப்பட்டுள்ளது.

வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம், திராவிடத்தின் உயர்வையும், சிறப்பையும் உணர்த்திக்கொண்டே இருக்கும் தளபதியார், பதவிகளில் மயங்கிக் கொள்கைகளை ஒருநாளும் இழந்துவிட மாட்டோம் என்பதை ஆரியக் கூட்டத்திற்கு அடிக்கடி நினைவுப்படுத்துகிறார்.

தளபதி அவர்களே, உங்களைத் தலைவணங்கி வாழ்த்துகிறோம்! ●



# வாக்காளர் அட்டை ஆதார் எண் இணைப்பு

மா.உதயகுமார்



வாக்காளர் அட்டையை ஆதார் எண்ணுடன் இணைக்க வழி செய்யும் தேர்தல் சட்டத்திருத்த மசோதா, மக்களவை-மாநிலங்களவை, இரண்டு அவைகளிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தலில் கள்ள ஓட்டுகளைத் தவிர்க்கும் வகையில், வாக்காளர் அடையாள அட்டையை ஆதார் எண்ணுடன் இணைக்க வேண்டும் என்பதற்காகத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்ய, ஒன்றிய அரசைத் தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இச்சட்டத்திருத்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இதில் முதன்மையானதாக 3 முக்கியப் பிரச்சினைகள் இருப்பதாகக் கருத்துகள் முன்வைக்கப்படுகிறன. அவை:

1. குடிமக்களின் அந்தரங்க உரிமை மீறல்;

2. வாக்காளர் விவரக்குறிப்பு (voter profiling) செய்யப்படுதல்;

3. அதன்மூலம் வாக்காளரின் அரசியல் பின்னணியைத் தெரிந்து கொண்டு, ஓட்டு உரிமையைப் பறிக்கும் அபாயம்.

முதலாவதாக, குடிமக்களின் அந்தரங்க உரிமை தொடர்பாக ஆதார் எண்ணைக் கட்டாயமாக்கக் கூடாது என்ற உச்ச நீதிமன்றத்தின் புட்டசாமி வழக்கின் தீர்ப்பு இருப்பதால், இது கட்டாயமாக்கப்படாது; வாக்காளரின் விருப்பத்தின் அடிப்படையிலேயே வாக்காளர் அடையாள அட்டை ஆதார் எண் இணைப்பு செயல்படுத்தப்படும்; இது கட்டாயமில்லை என்றும் ஒருவர் தகுந்த காரணங்களால் ஆதார் எண்ணைக் கொடுக்க முடியாவிட்டால் அவரை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கு மறுக்க முடியாது என்றும் மசோதாவில் கூறப்பட்டுள்ளது.

இது நடைமுறையில் எப்படி இருக்கும் என்பது நாடறிந்த ஒன்றே. யாருக்கும் இது கட்டாயம் இல்லை என்றால், பிறகு எப்படி இவர்கள் கள்ள ஓட்டுகளைத் தவிப்பார்கள்? எனவே இது சமாளிப்பதற்கான காரணமாகவே இருக்கிறது.

வாக்காளர் பற்றிய விவரங்கள் தேர்தல் ஆணையத்திடம் தனியாக உள்ளன. தேர்தல் ஆணையமே அவற்றைச் சரிபார்க்கும் நடைமுறைகளை மேற்கொள்கிறது. அரசின் மற்ற தகவல்களிலிருந்து வாக்காளர் பட்டியல் விவரம் தனியாக உள்ளது. வாக்காளர் அடையாள அட்டை ஆதார் எண்ணை இணைப்பதன் மூலம் வாக்காளர் பற்றிய விவரங்கள் ஆணையத்திற்கும் கிடைக்கும். அதன் மூலம் ஒரு குறிப்பிட்ட நபரின் அரசியல் பின்னணியைத் தெரிந்து கொண்டு அரசியல் நோக்கத்தோடு அவர்களது வாக்குரிமை பறிக்கப்படலாம். இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் மவுனமாகக் கடந்து சென்றுவிட்டது ஒன்றிய அரசு.

இந்த இணைப்பில் இன்னொரு பேராபத்தும் ஒளிந்திருக்கிறது. ஒரே நாடு, ஓரே தேர்தல் என்ற ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.கவின் திட்டத்திற்கு எளிதில் வகைசெய்யவும் இது பெரிதும் துணைபுரியும்.

வாக்காளர் அட்டையை ஆதார் எண்ணுடன் இணைக்கும் நடவடிக்கையைத் தனி நிகழ்வாகப் பார்க்க முடியாது. இது குடிமக்களின் அனைத்துத் தரவுகளையும் கைக்குள் வைத்துக் கொண்டு, அவர்களை அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறது என்ற உளவியல் உணர்வுக்குள் வைத்திருப்பதற்கான ஒன்றிய அரசின் தொடர் நடவடிக்கைகளுள் ஒன்றுதான்.

இன்னொரு பக்கம், தனிநபர் அந்தரங்க தரவுப் பாதுகாப்புச் சட்ட மசோதா (The Personal Data Protection Bill, 2019), ஒன்றிய அரசுக்குக் கூடுதல் அதிகாரங்களைக் கொடுக்கும் வகையில் இயற்றப்பட்டு, அது இன்னும் சட்டமாக்கப்படாமல் தொடர்ந்து நாடாளுமன்றக் கூட்டுக் குழுவில் விவாதிக்கப்பட்டு வருகிறது.

உலகின் மற்ற நாடுகளில் எல்லாம் இப்படி அனைத்துத் தரவுகளையும் அரசு கைக்குள் வைத்திருக்கும் சட்ட ஏற்பாடுகள் இல்லை. தனிநபர்களின் தரவுகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் வலுவாக இயற்றப்பட்டிருக்கின்றன. ஆனால் இங்கே ஒன்றிய அரசு, மக்கள் நலனுக்கு எதிராகச் செயல்பட்டு வருகிறது. மக்களைத் தொடர்ந்து தன்னுடையக் கண்காணிப்பிற்குள் வைத்திருக்க என்னென்ன செய்ய முடியுமோ, அனைத்தையும் செய்கிறது. ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## விவாதம் இல்லா நிறைவேற்றம் ?

நாடாளுமன்றம் ஒரு தனிநபருக்கோ அல்லது எந்த ஒரு கட்சிக்கோ சொந்தமானது அல்ல. அது மக்களின் சொத்து.

மக்களின் நலனும், அவர்களின் வளர்ச்சியும், நாட்டின் வளர்ச்சியும் குறித்துப் பேசி, விவாதித்து முடிவெடுக்க வேண்டிய இடம் நாடாளுமன்றம். மோடி தலைமையிலான ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் மட்டுமே வைத்துக் கொள்ளப் பார்க்கிறது.

எந்த ஒரு சட்ட முன்வடிவு கொண்டு வந்தாலும் அது குறித்து விவாதிக்க எதிர்க்கட்சிகளை அனுமதிப்பதில்லை. முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் கூட அங்கு விவாதிக்க வாய்ப்புகள் வழங்கப்படுவது இல்லை.

மூன்று வேளாண் சட்ட முன்வடிவு நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. அரசு கொண்டு வந்த போதும்....

குடியுரிமைத் திருத்தச் சட்ட முன்வடிவு கொண்டு வந்த போதும்....

லக்கிம்பூர் வேளாண் மக்கள் ஊர்வலத்தில் நிகழ்த்தப்பட்ட படுகொலை பற்றி விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் குரல் கொடுத்த போதும்....

அண்மையில் ஆதார் அடையாள அட்டை வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்கும் சட்டமுன்வடிவு கொண்டு வந்த போதும்....


பெண்களின் திருமண வயதை 18 இல் இருந்து 21 ஆக உயர்த்தும் சட்ட முன்வடிவு நாடாளுமன்ற இரு அவைகளில் கொண்டு வந்த போதும், அவைகள் குறித்து விவாதிக்க விடாமல் எதிர்க்கட்சிகளை ஓரம் கட்டிப் புறக்கணித்தது கண்டனத்திற்குரியது. இது ஜனநாயகத்திற்கு எதிரான செயலாகும்.

அங்கு வாக்கெடுப்பும் முறையாக நடைபெறவில்லை. கூச்சல் குழப்பங்களுக்கு இடையே குரல் வாக்கெடுப்பு என்று சொல்லி நிறைவேற்றப்படுவதில் எந்த ஒரு நடுநிலையும் இருப்பதாகத் தெரியவில்லை. இது நாடாளுமன்றத்தின் மாண்புக்கு இழுக்கைத் தருவதாக அமையும்.

இனி வரும் காலங்களில் நாடாளுமன்ற இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகளை மதித்து, அவைகளுடன் விவாதம் செய்து, முறையாக வாக்கெடுப்பு நடத்தி, சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

எதேச்சதிகாரம் எப்போதும் நிலைக்காது. மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

## தந்தை பெரியார்



**எங்களுக்கு உன் நிறம் கருப்பு**
**எதிரிகளுக்கோ என்றும்**
**நீ நெருப்பு!**

**டிசம்பர் 24**
**தந்தை பெரியாரின் நினைவுநாள்!**

- சுப.வீரபாண்டியன்

## மறைந்தார் சண்முகநாதன்



திருவாரூர் மாவட்டம் திருக்கண்ணமங்கையூரில், கோதண்டபாணி என்பவரின் மூத்த மகனாகப் பிறந்தவர் ஐயா சண்முகநாதன் அவர்கள்.

தொடக்கத்தில் திருவாரூர் கூட்டுறவு வங்கியில் பணியாற்றிய அவர், பின்னர் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் சுருக்கெழுத்தர் பணியில் சேர்ந்தார்.

இவரின் திறமையை அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கலைஞர் அவர்கள் மிகச் சரியாகக் கணித்து, அவரைத் தன் உதவியாளராய் இருக்க அழைத்தார்.

கலைஞரின் அழைப்பை மறுத்துச் சென்ற சண்முகநாதன் அவர்கள், அவரின் தந்தையாரின் வழிகாட்டுதலின்படி 16-2-1969 அன்று அன்றைய முதல்வர் கலைஞரிடம் உதவியாளராக வந்து சேர்ந்தார்.

அன்று தொடங்கி ஆகஸ்ட் 7, 2018 ஆம் நாள் தலைவர் கலைஞர் மறையும் வரை அவருடன் கோப்பெருஞ் சோழனுடன் பிசிராந்தையார் போல ஆழ்ந்த நட்புடன் இணைந்து, கலைஞரின் நம்பிக்கைக்குரிய உதவியாளராக இருந்த சண்முகநாதன் அவர்களின் மறைவுச் செய்தி பெருந்துயரத்தில் ஆழ்த்திவிட்டது.

அவருக்குத் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பாகப் புகழஞ்சலியைச் செலுத்துகிறோம்.

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# பரிதாப நிலையில் மீனவர்கள்!



**மதிவாணன்**

தமிழ்நாடு மீனவர்கள் 68 பேர் இலங்கை கடற்படையால் கைது. 10 படகுகள் பறிக்கப்பட்டன. மீட்கக் கோரி மீனவர்கள் போராட்டம். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்களுக்கு விரைந்து நடவடிக்கை எடுக்கக் கோரி கடிதம்.

இது இந்த வாரச் செய்தி மட்டும் அல்ல. எண்ணிக்கையும் பெயர்களும் மாறி மாறி வரும் பல்லாண்டு காலச் செய்திதான். விடுதலை இந்தியாவில் தமிழ்நாடு காவேரி மட்டும் அல்ல, கடல் எல்லையும் இழந்து உள்ளது. பாரம்பரிய எல்லையில் மீன் பிடிப்பதை வாழ்க்கை முறையாகக் கொண்டுள்ள மீனவர்கள், விடுதலை இந்தியாவில் உரிமையை இழந்தனர்.

சர்வதேசச் சட்டங்கள் பாரம்பரிய மீன்பிடி எல்லைகளை மீனவர்கள் பயன்படுத்த அனுமதிக்கின்றன. இருநாட்டு உறவுகள் மீனவர் உரிமைகளைப் பாதிக்கக் கூடாது என்கின்றன. ஆனால் இந்தச் சட்டங்கள் மருந்துக்கும் மதிக்கப்படுவதில்லை. மீனவர்கள் சிறைப்படுத்தப்படுவது அல்லது கொல்லப்படுவது தொடர் கதையாகி வருகின்றது.

முறைப்படி அனுமதி பெற்று மீன்பிடியில் ஈடுபடச் சென்ற மீனவர்களை முதலில் இராமேஸ்வரப் பகுதியைச் சார்ந்த 55 பேர் இலங்கைக் கடற்படையால் பிடித்துச் செல்லப்பட்டு உள்ளனர். பிறகு புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 13 மீனவர்கள் பிடித்துச் செல்லப்பட்டு உள்ளனர். இது மீனவர்கள் நடுவே கடும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

மீனவர்கள் இந்துகள் மட்டும் இல்லை கணிசமான அளவு கிறிஸ்தவர்கள் உள்ளனர். கிருஸ்மஸ் விழா நெருங்கும் நேரத்தில் நடைபெறும் இந்தத் தொடர் கைது, அவர்களின் மதம் சார்ந்த விழாவை முடக்கிப் போடும் என்பதில் அய்யம் இல்லை. இந்தக் கோணத்திலும் பார்க்க வேண்டியுள்ளது.

பிடிபட்ட மீனவர்களுக்குக் கொரோனா பரிசோதனை நிகழ்த்தப்பட்டுள்ளது, சரி. ஆனால் கிருமிநாசிகள் தெளிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயல் அவர்களின் இழிவான பார்வையின் வெளிப்பாடு. இவை மனித உரிமை மீறல் ஆகும். இது போன்ற இழிவானப் பாரபட்சமான நடவடிக்கைகள் இந்தியத் துணைக் கண்டத்திற்குப் புதியது அல்ல. பாரம்பரியப் பண்பாடோடு கலந்ததே ஆகும். அதனாலோ என்னவோ இது போன்ற நடவடிக்கையில் ஒருவர் பாதிக்கப்படும் பொழுது, அவரின் மனவேதனை மற்றவர்களுக்குக் குறிப்பாக ஒன்றிய அரசுக்குப் புரிவதில்லை.

இந்தக் கைதுகளை ஒன்றிய அரசின் கவனத்திற்குத் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் இரு முறையும் கொண்டு சென்று உள்ளார். முதல் முறை கடிதம் மற்றும் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்பட்டது. இரண்டாவது முறை கடிதத்தை திமுக எம்பி-கள் நேரில் சென்று வெளியுறவுத்துறை அமைச்சரிடம் வழங்கினர்.

இதில் அச்சமூட்டும் நிகழ்வுகளில் இலங்கை ஈடுபடுவதைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்றும், நமது பாரம்பரியப் பகுதிகளில் மீன்பிடி உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்றும், மீனவர்களையும் அவர்தம் உடைமைகளையும் பாதுகாப்பதும் நமது கடமையாகும் என்றும் வலியுறுத்தி உள்ளார்.

வெளியுறவுத்துறையைக் கையில் வைத்திருக்கும் ஒன்றிய அரசுக்கு, தமிழ்நாடு அரசு கடிதம் எழுதும் வரை, நடந்தவைக் குறித்து எதுவும் தெரியாதா என்ன? உலகின் மிகப்பெரியக் கடற்கரை வைத்துள்ள நாடுகளில் ஒன்றான இந்தியாவின் மீனவர் சார்ந்த பார்வைதான் என்ன? தெற்காசிய நாடுகளில் வல்லாதிக்க நாடாக இருக்கும் இந்தியாவிற்குத் தனது குடிமக்கள் கொல்லப்படுவதும், கைது செய்யப்படுவதும், அவர்கள் நடத்தப்படும் விதம் குறித்தும், பொருட்கள் சேதப்படுத்தப்படுவது குறித்தும் எந்தக் கவலையும் இருப்பதாகத் தெரியவில்லை.

அறுக்கத் தெரியாதவன் கையில் ஐம்பது அரிவாள் என்பது பழமொழி. உலகின் மிகப்பெரிய மக்களாட்சி ஒன்றிய அரசுகளுக்குத் தன் நாட்டு மக்கள் மீது அக்கறை இல்லை எனில், இந்த அரசுக்கு எதற்கு இவ்வளவு பெரியக் கடற்படை எனக் கேட்கத் தோன்றுகின்றது.

தெற்காசிய நாடுகளுக்கு மனிதர்களின் வாழும் உரிமை மதிக்கும் பண்பு மனதளவில் இன்னும் வளர்த்துக் கொள்ள வேண்டியது இருக்கின்றது. தங்களது வல்லாதிக்கத்தை நிலை நிறுத்தும் போக்கே முக்கியமானது எனும் குறுகியப் பண்பாட்டுக் கூறுகளில் இருந்து வெளிவர வேண்டும். இந்தக் குறுகியப் பண்பாட்டுக் கூறை, ஒவ்வொரு உள்ளூர் வீதிகளுக்குள்ளும் காண முடியும் என்பது வேதனை.

ஒன்றிய அரசு தனது வெளியுறவுத்துறை மூலம் இலங்கையுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு நிரந்தர முடிவைப் பெற்றுத் தர வேண்டும். மற்றும் மீனவர்கள் பாதுகாப்பையும் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளையும் உறுதி செய்ய வேண்டும் என்ற முதலமைச்சர் மு.க ஸ்டாலின் வலியுறுத்தலின் படி ஒன்றிய அரசு செயல்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு. •

Published By Dravida Iyyakka Tamilar Peravai.   Editor Suba. Veerapandian